# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

உதவி புலனாய்வு அலுவலர் பதவி

மேற்கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள்** :

(i) வயதெல்லை.- 21 வயதுக்கு குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(ii) கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் :

(அ) 4 வருடங்களுக்கு குறையாத காலம் செயற்தொழிலில் ஈடுபட்டிருந்த சட்டத்தரணி ஒருவர் ;

அல்லது

(ஆ) இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர் ஒருவர் ;

அல்லது

(இ) அரசாங்க சட்டத் துறைகளில் ஆகக்குறைந்தது 7 வருடகால சேவை அனுபவமும் பொது எழுதுவினைஞர் சேவையின் முதலாம் வகுப்பின் 5 வருட சேவைக்காலத்தையும் கொண்டுள்ள அலுவலராக இருத்தல் அல்லது அரசாங்க சட்டத் துறைகளில் ஆகக்குறைந்தது 12 வருடகால சேவை அனுபவமும், பொது எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் 'அ' பிரிவில் 10 வருட சேவைக் காலத்தையும் கொண்டுள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- நீதிமன்ற நடபடிமுறைகள், கணக்கியல் அலுவல்கள், நிருவாக அலுவல்கள் மற்றும் கணக்காய்வு அலுவல்கள் பற்றிய அனுபவம் விசேட தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- அரச நிருவாகச் சுற்றுநிரூபம் 06/2006 அமைவாக SL I-2006 step 08- ரூபா 27,450 - 3 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்) ஆரம்ப வேதனம் ரூ. 27,450 (மாதாந்த வேதனம் ரூ. 31,755 இற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு.) 45 வயதினை பூர்த்திசெய்து உரிய வேதன படிநிலைக்கு வந்தவர்கள் வினைத்திறமைகாண் தடையிலி ருந்து விடுவிக்கப்படுவர்.

4. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும்.

5. தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 11 1/2" x 8 1/2" அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2012.07.13 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு உரிய முறையில் கிடைப்பதற்காக தனிப்பட்ட முறையிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அவைகளைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

6. ஒவ்வொரு விண்ணப்பதாரியும்-

(அ) நல்லொழுக்கமும் சிறந்த உடல் நலத்தையும் கொண்டுள்ள வர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைப் பிரசையாகவும் இருத்தல் வேண்டும்.

7. பின்வரும் ஆவணங்களுள் ஒன்று அல்லது எல்லாவற்றையும் வேண்டப்படும்பொழுது சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ் ;

(இ) தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சித்தியெய்தியிருக்கும் உயர் பரீட்சைகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) நீதிமன்ற நடபடிமுறைகள், கணக்கியல் அலுவல்கள், கணக் காய்வு அலுவல்கள், நிருவாக அலுவல்கள் புலனாய்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய அனுபவம் என்ப வற்றை உறுதிசெய்யும் சான்றிதழ்கள்.

8. அரசாங்க/கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்கள் தமது திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்களின் ஊடாக விண்ணப் பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. விண்ணப்பங்களும் அது சம்பந்தப்பட்ட கடிதங்களும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமே யன்றி இவ்வலுவலகத்தினது வேறு எந்தவொரு அலுவலருக்கும் அனுப்பப்படலாகாது.

10. விண்ணப்பங்கள் கிடைத்ததைப் பற்றி அறிவிக்கப்படும். ஒரு வாரத்திற்குள் அது கிடைத்ததாக அறிவிப்பொன்று கிடைக்காவிடின் விண்ணப்பதாரி அதைப் பற்றி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

11. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு உரித்தான பொது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரிகளின் கவனம் கோரப்படுகின்றது.

மஞ்சுள திலகரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12,
2012, யூன் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவை ஆணைக்குழு**

உதவி புலனாய்வு அலுவலர் பதவி

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :----.

2. (i) நிரந்தர முகவரி :----.
   (ii) அலுவலக முகவரி :----.

3. தேசிய இனம் :----.

4. (i) பிறந்த திகதி :----.
   (ii) வயது :----.

5. (i) பால் (ஆணா/ பெண்ணா) :----.
   (ii) விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? விதவையா ? : ----.
   (iii) கணவன்/ மனைவி அரசாங்க கூட்டுத்தாபன தனிப் பட்ட நிறுவனமொன்றில் சேவையாற்றின் அதுபற்றிய விபரங்கள் :----.

6. கல்வி தொழில் தகைமைகள் :----.
   (திகதிகளைக் குறிப்பிடவும்.)

7. வர்த்தமானி அறிவித்தலின் (2) ஆம் பந்தியில் (ii) (அ), (ஆ), (இ) அதன் குறிப்பின்கீழ் ஏற்புடைய விபரங்கள் முழுமையாக (திகதிகளையும்/ காலப்பகுதியையும்) குறிப்பிடவும் :----.

8. (i) சட்டத்தரணி ஒருவரானால் தொழிலில் சேர்ந்த திகதி : ----.
   (ii) செயல் முறையில் தொழிலில் ஈடுபட்டிருந்த காலப்பகுதி (திகதிகளைக் குறிப்பிடவும்) :----.

9. அரசாங்கத்தில்/ கூட்டுத்தாபனமொன்றில் சேவையில் ஈடுபட்டவர் எனில் முழுச்சேவை விபரங்கள் (திகதிகளையும்/ காலப்பகுதிகளையும் குறிப்பிடவும்.) :----.

10. சித்தியெய்தியிருக்கும் உயர்ந்த பரீட்சை :-

    (1) சிங்களத்தில் :----.
    (2) தமிழில் :----.
    (3) ஆங்கிலத்தில் :----.

11. தனிப்பட்ட விபரங்களை விசாரிக்கக்கூடியவர்கள் :----.
    (அவர்கள் உங்களை நன்கு அறிந்த, பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.)
    (அரசாங்க/ கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்களுக்கு இது ஏற்புடைத்தாகாது.)

    (i) பெயர் :----.
    முகவரி :----.
    தொழில் :----.
    எப்போதிருந்து உங்களை அறிவார் ? :----.

    (ii) பெயர் :----.
    முகவரி :----.
    தொழில் :----.
    எப்போதிருந்து உங்களை அறிவார் ? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதி செய்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவரின் சான்றிதழ் :**

............................................................ எனும் அலுவலரினால் இதன் 9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அவரின் அந்தரங்க கோவையின்படி சரியானவையாகும். மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்கள/ கூட்டுத்தாபனத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

6-880

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றைப் பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2013

தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன் தொழிற்பயிற்சி ஒன்றைப் பயிலுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும் தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகவுத்திறன்**.- சகல விண்ணப்பதாரர்களும்-

2.1 இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
2.2 சிறந்த ஒழுக்கமும் உறுதியான உடல், உளநலமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

